

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலை அரங்கில் (16.11.2024) அன்று நடைபெற்ற 71 வது கூட்டுறவு வார விழாவில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று 698 பயனாளிகளுக்கு ரூபாய் 8.42 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை,மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,மாநகராட்சி ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,துணை மேயர் கே.ஆர்.ராஜ்,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த், ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.



திருப்பத்தூர் ஒன்றியத்தில் வாக்காளர்கள் சிறப்பு முகாம் முகாமை மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. முன்னிலையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரடி ஆய்வு செய்தார். உடன் சி.என்.அண்ணாதுரை எம்.பி., எம்.எல்.ஏக்கள் ஏ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

### அ.நடராஜன் தலைமை! அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார்!

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. -தங்க.சித்தார்த் - ஏ.கே.அருண் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ. 18 -

பெரம்பலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வரவேற்புரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த், ஏ.கே.அருண் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து பேசினார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அழகு.நீலமேகம், பட்டுச்செலவி ராஜேந்திரன்,மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய பெருந்தலைவர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, க.ராமலிங்கம், மீனா அண்ணாதுரை,பிரபா செல்லப்பிள்ளை, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ. வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துலகரீம், வ.சுப்ரமணி யன், மா.பிரபாகரன்,

டி.ஆர்.சிவசங்கர், ஆர். அருண், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலட்சுமி சேகர், ஏ. எஸ். ஜாஹிர் உசேன், பேரூராட்சி தலைவர்கள் சங்கீதா ரமேஷ், வள்ளியம்மை ரவிச்சந்திரன், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், துணைத் தலைவர் சரண்யா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது,

மாவட்ட அமைப்பு விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளரும் அரசு குற்றவியல் வழக்கறிஞர் பா.செந்தி ல்நாதன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர். முத்தரசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் டாக்டர் அ. கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். முருகேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்மேகம், தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச.மாவட்ட கவுண்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர்கள் சி.காட்டுராசா, ஏ.எம். கே.கரிகாலன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்பை.தர்மராஜ், தலைமைக் கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜயரத்தினம்,

நகர் மன்ற உறுப்பினர்கள் பாரி(எ)அப்துல்பாரூக், ரகமத்துல்லா, நல்லுசாமி,

கொளக்காநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் என்.ராகவன்,

மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்ததுச்செல்வன், வனிதாசுப்ரமணியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரா.சிவா, அன்புச்செல்வன், ஆர்.கணேசன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர் நன்றியுரையாற்றினார்.

இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

நவம்பர் 15, அன்று பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தரும், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும், அனைத்து நிலை நிர்வாகிகளும் திரளாக கலந்து கொள்வது எனவும், துணை முதலமைச்சராக பதவியேற்று திருச்சி செல்லும் வழியில், முதல் முறையாக பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் மாண்புமிகுதுணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட எல்லையில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும்,

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27, அன்று மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும்,

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்,நீக்குதல் முகாம் நடைபெற்று வருகிறது.இதில் BLA2, மற்றும் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டு, இறந்தவர்களின் பெயர்களை நீக்கியும், புதிய வாக்காளர் பெயர்களை சேர்க்க வேண்டும் எனவும்,

வருகிற 2026, சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பது எனவும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், பாடாலூர் கிளை கழகச் செயலாளர் துரைசாமி மறைவிற்கும், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம்,திருவாளந்துறை ஒன்றிய குழு உறுப்பினர் சுமதி கணவர் மணிவண்ணன் மறைவிற்கும்,

தலைமை கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம் மனைவி செல்வவசந்தி மறைவிற்கும், டாஸ்மார்க் தொ.மு.ச.மாவட்ட செயலாளர் மதியழகன் தந்தை செல்லபெருமாள் மறைவிற்கும்,

பெரம்பலூர் முன்னாள் நகர செயலாளர் பழனியப்பன் மனைவி தமிழரசி மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# புதுக்கோட்டையில் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, நவ. 18 -

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி , பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் (16.11.2024) அன்று துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள், மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள், பேச்சு, கட்டுரை, ஒலியப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கூட்டுறவுத் துறையின் மூலம் மகளிர்சுய உதவிக் குழுக் கடன், பயிர் கடன், நகைக் கடன், உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா துவக்கி வைத்து, மகளிர்கய உதவிகுழுக் கடன், கே.சி.சி பயிர் கடன்கள், கூட்டுப் பொறுப்பு குழு பயிர் கடன், கைம்பெண்கள் கடன், மாற்றுத்திறனாளிகள் கடன் உள்ளிட்ட கடனுதவிகள் 721 பயனாளிகளுக்கு ரூ.5.02 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 197 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் பயிர் கடன், கே.சி.சி. AH கடன், நகைக்கடன், கூட்டுப் பொறுப்புக் குழு கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சுய உதவிக்குழுக் கடன்கள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் கைம்பெண்கள் கடன், மத்திய கால முதலீட்டு கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், பயிர் காப்பீடு உள்ளிட்ட பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, கூட்டுறவுத் துறையின் மூலம் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வின் பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்குதல் உள்ளிட்டவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா துவக்கி வைக்கப்பட்டது.

மேலும், கூட்டுறவு கடன் சங்கங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்காற்றி வருவதன் மூலம் பல்வேறு வகையான கடன் உதவிகள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு அதிக அளவிலான கடனுதவிகளை வழங்கி தமிழகம் சிறந்து விளங்குகிறது.

எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயனடையும் வகையில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாக கொண்டு சேர்த்திட வேண்டும் எனவும் பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை. முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சி ன்னத்துரை (கந்தர்வக்கோட்டை), புது க்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அ.ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் தனலட்சுமி, சரக துணைப் பதிவாளர் ப. மணிமேகலை மற்றும் எம். எம்.பாலு, க.நைனாமுகமது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மணிப்பூரில் தொடரும் வன்முறை!

இம்பால், நவ. 18 -

மணிப்பூரில் தீவிர வாதிகளால் கடத்தப்பட்ட 6 பேரின் உடல்களை கண்டெடுக்கப்பட்ட சில மணி நேரத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் முதல்வர், எம்எல்ஏக்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

போராட்டக்காரர்கள், மாநில முதல்வர் பிரேன் சிங்கின் மருமகன் உட்பட ஆறு எம்.எல்.ஏ.க்களின் மூன்று பேரின் வீடுகளில் சூறையாடினர்,

சொத்துக்களை தீ வைத்து சேதப்படுத்தினர். இம்பால் நகரின் பல பகுதிகளில் போராட்டக்காரர்களை கண்ணீர் புகை குண்டு வீசி கலைத்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

போரட்டத்தைத் தடுக்கும் விதமாக ஐந்து மாவட்டங்களில் அரசு காலவரையற்ற ஊரடங்கை அமல்படுத்தியுள்ளது. சில இடங்களில் இணையத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சர்கள் சபம் ரஞ்சன், எல். சுசிந்த்ரோ சிங் மற்றும் ஒய்.ஹேம்சந்த் ஆகியோரின் வீடுகளை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் இம்பால் மேற்கு மற்றும் கிழக்கு, பிஷ்னுபூர், தவுபால் மற்றும் கக்சிங் ஆகிய ஐந்து மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



தென்காசி மாவட்டத்தில் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவிலான கூட்டுறவு வார விழா தென்காசி இலஞ்சி ஸ்ரீ சாரதாம்பா கிராண்டில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீ குமார்,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று உயிரிழந்த நியாயவிலைக் கடை விற்பனையாளர் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 25 லட்சத்திற்கான காசோலை மற்றும் 3103 பயனாளிகளுக்கு ரூ.31.71 கோடி மதிப்பிலான பயிர்கடன், கால்நடை பராமரிப்பு கடன்,கைம் பெண்கள் கடன்,டாம்கோ,மகளிர் சுய உதவி கடன்,பெண்கள் தொழில் முனைவோர் கடன் உள்ளிட்ட கடன் தொகைக்கான காசோலையினையும், வருவாய்த் துறையின் மூலம் 1072 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களையும் வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன்,கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கு.நரசிம்மன், துணைப்பதிவாளர் பூர்விசா, இணைப்பதிவாளர் மா.உமா மகேஸ்வரி உள்பட கூட்டுறவு சங்க பணியாளர்கள், அரசு அலுவலர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.





கப்பலோட்டிய தமிழன்
வ.உ.சிதம்பரனார் அவர்களின்
88ஆவது நினைவு நாள்

தியாகத் திருநாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாள் : 18.11.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி
இடம் : காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை

இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.in.gov.in

செ.ம.தொ.இ./1155/வரைகலை/2024